செ.வெ.எண்: 36 20.1.09

# பத்திரிக்கை செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல்,மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்ப , துறையின் , சென்னை 14 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் கண்ட இடங்களில் சனவரி 2009 மாதத்திற்கான மக்கள் குறைதீர் கூட்டம் 24.01.2009 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல் படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக பொருட்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறை தீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். சென்னையில் உள்ள 14 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம் /- வி.சந்திரசேகரன்.

இணை ஆணையாளர் (உ .பொ)

1/2 இணை ஆணையாளருக்காக (உ.பொ) 19.1.2009 2/3

இணைப்பு - 1

| வ.எண் | அலுவலகம் | கூட்டம் நடக்கவிருக்கும் இடம் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி .<br>15. அம்மை அம்மாள் தெரு. புளியந்தோப்பு.<br>செ- 12 |
| 2 | இராயபுரம் | செயின்ட் ஆனிஸ் பிரைமரி ஸ்கூல்.<br>65.66 மேற்கு மாதா கோயில் ரோடு. இராயபுரம்.<br>செ-13 |
| 3 | பெரம்பூர் | ஹைதர் கார்டன் மேல்நிலைப்பள்ளி.<br>1 ஹைதர் கார்டன் விரிவு. ஜமாலியா. செ - 12 |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி ஆண்கள்<br>மேல்நிலைப்பள்ளி.<br>சூளைமேடு நெடுஞ்சாலை. செ- 94 |
| 5 | அம்பத்தூர் | சர் ராமசாமி முதலியார் மேல்நிலைப்பள்ளி.<br>1 / 3. எம்.டி.எச் சாலை. அம்பத்தூர் OT . செ- 53 |
| 6 | வில்லிவாக்கம் | வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி.<br>பூந்தமல்லி நெடுஞ்சாலை. நெற்குன்றம். செ- 107<br>( வெங்காய மண்டி பேருந்து நிலையம் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | அவர் லேடி மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி.<br>லட்சுமி அம்மன் நகர். எருக்கஞ்சேரி. செ- 118<br>(பவித்ரா மருத்துவமனை அருகில்) |
| 8 | தி நகர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி.<br>83-வது தெரு. கன்னியப்பா நகர். அசோக் நகர்.<br>செ -83 |
| 9 | மயிலாப்பூர் | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி.<br>பேராசியர்சஞ்சீவி தெரு . மயிலாப்பூர். செ- 4 |
| 10 | பரங்கிமலை | கண்டோண்மென்ட் உயர்நிலைப்பள்ளி.<br>(கண்டோண்மென்ட் கல்யாண மண்டபம் அருகில்)<br>பூந்தமல்லி நெடுஞ்சாலை. பட்ரோடு .<br>பரங்கிமலை. செ-16 |
| 11 | தாம்பரம் | தமிழ்பூங்கா தெரு நகராட்சிப்பள்ளி.<br>இரும்புலியூர். சென்னை - 45 |
| 12 | சைதாப்பேட்டை | அரசினர் மேல்நிலைப்பள்ளி. ( ஹோட்டல்<br>சரவணபவன் எதிரில்) அண்ணா நெடுஞ்சாலை.<br>எம்.ஜி.ஆர் நகர். சென்னை - 78 |
| 13 | ஆயிரம் விளக்கு | கேசரி மேல்நிலைப்பள்ளி.<br>121. தியாகராயா நெடுஞ்சாலை. தி.நகர்.<br>சென்னை - 17 |
| 14 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி.<br>102.106. டாக்டர் பெசண்ட் சாலை. ராயப்பேட்டை.<br>சென்னை - 14 |

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9